தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 21, பவ—திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, ஏப்ரல் 4, செவ்வாய்க்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“ உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து ”

உலகில் எல்லாத் தொழில்களிலும் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் உணவு அளித்துக் காப்பாற்றி வருவதால் உழவர்கள் உலகத்திற்கு அச்சாணியாகக் கருதப்படுவார்கள்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள். வினா எண் 201. திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு நிதி அமைச்சர்.

201—

சிறுசேமிப்பு ரதத்தின் மூலம் வசூல்

***39680—**திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் இயக்கப்படும் தமிழக அரசின் சிறுசேமிப்பு ரதத்தினால் இது வரை வசூல் செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) எந்த மாவட்டத்தில் அதிக நிதி வசூலாகியுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) **1993-94** நிதி ஆண்டில் நீலகிரி மாவட்டம் நீங்கலாக, ஏனைய மாவட்டந்தோறும் இயக்கப்பட்ட சிறுசேமிப்பு ரதத்தினால் வசூல் செய்யப்பட்டுள்ள தொகை ரூ.1,145.56 இலட்சம் ஆகும்.

(ஆ) அதிக நிதியாக ரூ. 189.97 இலட்சம் பெரியார் மாவட்டத்தில் வசூலாகியுள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இன்றைக்கு எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் தமிழகம் முதலிடம் வகிக்கக்கூடிய நல்ல நிலையை இதய தெய்வம் அவர்கள் உருவாக்கி நமக்கெல்லாம் பெருமையை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்பதற்கு முன்னர் சிறுசேமிப்பை பொறுத்த அளவில் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம் எத்தனாவது இடத்தில் இருந்தது ? தற்சமயம் எந்த இடத்தில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுதுமே தமிழகம் 3-வது இடத்திலே இருந்து வருகிறது. ஆகவே, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளத்திற்கு அடுத்தபடியாக நிதி வசூலிலே தமிழகம் 3-வது இடத்திலேயிருந்தாலும், ஆண்டுக்காண்டு அதிகப்படியாக நிதி வசூல் செய்வதிலே நாம் மேம்பாடு காட்டி வருகிறோம். அந்த வகையிலே சிறப்பான நடத்தையை தமிழகம் பெற்றிருக்கிறது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சிறுசேமிப்பு ரதத்தினால் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் வசூல் ஆன தொகை எவ்வளவு ? அதன் வழியாக அண்ணா மாவட்டத்திற்கு தமிழக அரசின் சார்பாக வழங்கப்பட்ட ஊக்கத் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பு ரதம் ஊர்வலம் வருகின்றபோது, உலா வருகின்றபோது, அந்தந்த மாவட்டங்களிலே சிறுசேமிப்பு நிதிக்கு சேர்ந்த தொகை பற்றிய விவரங்கள் வினாவின் மூலம் கேட்கப்பட்டது. அந்த வகையில் முதல் இடம் பெரியார் மாவட்டம் 1 கோடியே 89 இலட்சத்து 97 ஆயிரம் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது இடத்தை திண்டுக்கல் அண்ணா மாவட்டம் பெறுகிறது. 1 கோடியே. 22 இலட்சத்து. 75 ஆயிரம், மொத்த சிறுசேமிப்புத் தொகையை பொறுத்த அளவில் கணக்கிட்டுதான் மாவட்டத்திற்கு ஊக்கத் தொகை அளிக்கிறோம். தனிக் கேள்வி போட்டால் தனியாகச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. தேவராஜ்.

1995 ஏப்ரல் 4]

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிறுசேமிப்புத் துறையிலே முகவர்கள் நியமித்து இருக்கிறோம். அந்த முகவர்கள் ஒரு பகுதியிலேயிருந்து தொழில் செய்ய வேண்டுமென்று ஏதாவது அறிவுறுத்தப்பட்டிருக்கிறதா? உதாரணமாக செய்யாரிலே இருந்து ஒருவர் சென்னைக்கு வந்து சிறுசேமிப்புத் துறையின் மூலமாக பணம் வசூல் செய்து கொடுக்கின்றபோது அவர் செய்யாரிலே கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படி மாவட்டத்திற்கு மாவட்டம் தான் செய்ய வேண்டுமென்று சொன்னால் அந்த மாவட்டத்திற்கு இலக்கு அதிகமாகக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதே நேரத்தில் தனிப்பட்ட ஒருவரை ஒரு முகவர் அணுகி கேட்கின்றபோது தன்னுடைய சுய ஆதாயம் கருதியும் சிறுசேமிப்பிலே முதலீடு செய்யலாம், கேட்கின்றவரைப் பொறுத்தும் முதலீடு செய்யலாம். ஆகையினால், ஒரு மாவட்டத்திலே இருக்கின்றவர் தமிழகத்திலே எங்கு சென்றாலும் முகவராக செயல்படுவதற்கு அனுமதி அளிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகவர் நியமிப்பது அந்தந்த மாவட்டத்தைப் பொறுத்துத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், சிறுசேமிப்புத் துறை அதிகாரிகள் மூலமாகவும் நியமிக்கப்படுகிறார்கள். ஆகவே, ஒரு இடத்திலே இருப்பவர்கள் மற்ற இடத்திற்கு சென்று நிதி வசூல் செய்யலாமா என்பதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற இந்த நாளில் தனியார் பெனிஃபிட் ஃபண்டு மற்றும் ஃபினான்ஸ் போன்றவை ஆரம்பித்து இந்தச் சிறுசேமிப்பிலே சிறு சிறு தொழிலாளர்கள், முதலாளிகள், சிறு சிறு வியாபாரிகள், வருகின்ற அந்தப் பணத்தை அவர்கள் இன்றையதினம் பகிர்ந்து கொள்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றும் முகத்தான் நம்முடைய சிறுசேமிப்பிலே வட்டி விகிதத்தை உயர்த்தித் தர ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சாதாரணமாக வங்கிகள் மூலமாகவும், வேறு பல நிதி நிறுவனங்கள் மூலமாகவும் அளிக்கப்படுகின்ற வட்டித்

தொகையை விட சிறுசேமிப்பிலே அதிகமான அளவுக்குத்தான் வட்டித்தொகை தருகிறோம். வங்கிகளைப் பொறுத்தவரையில் 11 சதவீதம், 11½ சதவீதம், 12 சதவீதம் தான் தருகிறார்கள் என்று சொன்னால் ஐந்தாண்டு காலத்தில் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் 18½ சதவீதம் வட்டி கொடுக்கிற அளவுக்கு சிறுசேமிப்பில் இருக்கிறது. ஆனால் தனி கம்பெனிகள் போன்றவைகளும். தொழிற்சாலைகளும் இந்த சிறுசேமிப்பில் வைப்புத் தொகை வைக்கக்கூடாது என்று அண்மையில் மாற்றி இருக்கிறார்கள் அது ஒரு பாதகமாக அடுத்த ஆண்டில் அமையுமோ என்கிற அச்சம் ஏற்படுகிறது. அண்மையில் மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கை வந்தபோது இனிமேல் 1-4-95-லிருந்து தனியார் தொழிற்சாலைகளும். கம்பெனிகளும் சிறுசேமிப்பில் முதலீடு செய்யக்கூடாது என்று தடை விதித்து இருக்கிறார்கள். அவ்வாறு தடை விதித்ததன் காரணமாக அடுத்த ஆண்டில் சிறுசேமிப்பின் தொகை எல்லா மாவட்டங்களிலும் கூட குறையக்கூடும். இது பற்றி மத்திய அரசுக்கு எடுத்துத் தெரிவித்து. ஏற்கனவே இருந்த நிலைமையை நிலைநாட்ட வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 3 சதவீதம் ஊக்கத் தொகை தருகின்ற முயற்சி மேற்கொண்டதால் வேறு பல மாநிலங்களிலிருந்துகூட அதிகமான அளவுக்கு சில தொழிற்சாலைகளும். கம்பெனிகளும் நமக்கு நிதியுதவி தந்ததன் காரணமாக இந்த ஆண்டில் சிறுசேமிப்புத் தொகையில் மட்டும் கிட்டத்தட்ட நிகர இருப்பாக 700 கோடிக்கு மேல் சேருகிற நிலை இருக்கிறது. ஆனால் அந்த நிலை காப்பாற்றப்பட்டால் அடுத்த ஆண்டில் இன்னும் கூட அதிகரிக்கலாம். ஆனால் மத்திய அரசு இப்போது விதித்திருக்கிற அந்த சட்டத்தடை காரணமாக எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படுமோ என்கிற அச்சம் இருப்பதன் காரணத்தால் உரிய முறையில் மத்திய அமைச்சரிடத்திலும். மத்திய அரசினிடத்திலும் இந்த அரசு வற்புறுத்த இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே. ஹவுஸிங் போர்ட்-ல் 17 சதவீதமும். டி.யு.சி.எஸ்.-ல் அதாவது சூப்பர் மார்க்கெட்டில் 16 சதவீதமும் வட்டி தருகிறார்கள் ஃபிக்ஸட் டெப்பாசிட் போட்டால். அதேமாதிரி தந்தால் இன்னும் அதிகப்பேர்கள் வருவார்கள் அல்லவா ? அப்படிச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பில் கிசான் விகாஷ் பத்திரத்திலோ, இந்திர விகாஷ் பத்திரத்திலோ போட்டோமேயானால் 5 ஆண்டுகளுக்குப்

பிறகு 18½ சதவீதம் கிடைக்கிற சூழ்நிலை கூட இருக்கிறது. 5½ ஆண்டுகள் போட்டால் 20 சதவீதம் கூட கிடைக்கிற சூழ்நிலை இருக்கிறது. மற்றைய நிதி நிறுவனங்கள் வங்கிகள் ஆகியவற்றில் கிடைக்கிற தொகையை விட அதிகமாகக் கிடைக்கிற வாய்ப்பு தான் சிறுசேமிப்புத் துறையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 202, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. டி. வேலையா கேட்கிறார். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

202—

திருநெல்வேலி மத்திய சிறைச்சாலையில் மகளிர் சிறைவசதி

*25248—*திருமதி ரமணி நல்லதம்பி :*

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட மத்திய சிறைச்சாலையில் மகளிர் சிறை வசதி செய்துத் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள கொக்கிரக் குளத்தில் உள்ள தனிக் கிளைச் சிறையில் பெண் சிறைக்கைதிகளுக்கு, தேவையான வசதிகளும், இட ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. எனவே பாளையங்கோட்டையில் உள்ள மத்திய சிறையில் பெண் சிறைக் கைதிகளுக்கான ஒதுக்கீடு செய்யத் தேவையில்லை.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொக்கிரகுளத்தில் முன்பு 12 நீதிமன்றங்கள் இருந்தன. இப்போது 10 நீதிமன்றங்கள் பாளையங்கோட்டையில் உள்ள புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. இரண்டு நீதிமன்றங்கள் மட்டுமே தற்காலிகமாக அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. கைதிகளை எல்லாம் இப்போது மத்திய சிறையில் இருந்து அந்த கோர்ட் வளாகத்திற்குக் கொண்டு செல்வதில் சிரமம் இல்லை. ஆனால் கொக்கிரகுளத்தில் இந்தச் சிறை மட்டும் தனியாக இருப்பதால் பெண் கைதிகளை எல்லாம் அங்கே வைத்திருப்பதும், கோர்ட்டுக்குக் கொண்டு செல்வதும் கொஞ்சம் சிரமமான காரியமாக இருக்கிறது என்று அங்கே பணிபுரியும் அலுவலர்கள் மூலமாகவும் எங்களுடைய தனி அனுபவத்தின் மூலமாகவும்